**DVC No.3/2022 Date: 19.02.2026**

எ.ம.சா.1 தியாகராஜன், த.பெ.சீனிவாசன்

(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி:**

நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். 1ம் எதிர் மனுதாரர் மனுதாரர் மீது எந்த தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால், தேதி ஞாபகமில்லை. மேற்படி புகாரின் மனுரசீது எண் தெரியுமா என்றால், ஞாபகமில்லை. நிரூபண வாக்குமூலத்திற்கு விபரங்கள் எந்த தேதியில் எங்கு வைத்து சொன்னேன் என்றால், தேதி ஞாபகமில்லை,நீதிமன்றத்தில் வைத்துதான் சொன்னேன். விபரங்களை யாரிடம் கூறினேன் என்றால் இதே இடத்தில்தான் சொன்னேன். நானும் என் மனைவியும் மனுதாரர் மீது ஏதேனும் புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் சார்பு நீதிமன்றத்தில் வாபஸ் வாங்கியதாக சொல்லும் விவாகரத்து மனுவின் வழக்கு விபரம் தெரியுமா என்றால், தெரியும். மேற்படி வழக்கின் வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்க்கு ஏசி, பிரிட்ஜ், வாசிங் மெசின் ஆகியவற்றை எந்த தேதியில் வாங்கி கொடுத்தார் என்றால், ஞாபகமில்லை. கார்த்திக் என்பவர் எந்த இடத்தில் மொபைல் கடை நடத்தி வருகிறார் என்றால், காரைக்குடியில் வருமான வரி அலுவலகத்திற்கு அருகில் முன்பு நடத்தி வந்தார், தற்போது இல்லை. எப்போது நடத்தி வந்தார், எப்போது கடையை காலி செய்தார் என்றால் தெரியாது, இடைப்பட்ட காலத்தில் காலி செய்துள்ளார். அவ்வாறு கடை நடத்தப்பட்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் இல்லை.

திருமணம் ஆகி மனுதாரர் எத்தனை வருடங்கள் எங்களுடன் கூட்டுக் குடும்பமாக வசித்தார் என்றால், 2, 3 வருடங்கள் இருக்கும். மனுதாரரின் புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் சீர்வரிசை பொருட்களை எந்த வருடம் எடுத்து கொடுத்தார்கள் என்றால், 3 வருடம் இருக்கும். மேற்படி பொருட்களை எங்கள் வீட்டில் இருந்துதான் எடுத்துக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பொருட்கள் என்ன என்ன என்று காவல்துறையினர் எழுதி கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். எனக்கு எந்த விபரம் தெரியாமால் நிரூபண வாக்குமூலத்தில் கையெழுத்திட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதரார் எந்த காலத்திலும் தனியாக செல்லவில்லை என்றும் எங்களுடன் கூட்டுக் குடும்பமாகதான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் தனிக்குடுத்தனம் செல்லவில்லை என்பதால்தான் எங்களுடைய வீட்டில் இருந்து சீர்வரிசை பொருட்களை எடுத்துக்கொடுத்தார்கள் என்றால், எங்களுடைய வீட்டில் இருந்துதான் எடுத்துக் கொடுத்தார்கள். நாங்கள் மனுதாரரின் நகைகளை வைத்துக் கொண்டு தர மறுத்து அவரை முறையாக பராமரிக்காமல் தொந்தரவு கொடுத்ததால்தான் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எங்கு இருக்கிறார் என்றால் துபாயில் இருக்கிறார். 1ம் எதிர்மனுதாரர் துபாயில் எத்தனை வருடமாக இருக்கிறார் என்றால், 15, 20 வருடங்களாக இருக்கிறார். 1ம் எதிர்மனுதாரர் துபாயில் என்ன வேலை பார்க்கிறார் என்றால், கூலி வேலையும் பார்ப்பார் டிரைவர் வேலையும் பார்ப்பார். 1ம் எதிர்மனுதாரர் துபாயில் வேலை செய்வதற்கான விசா மற்றும் ஒர்க் பெர்மிட்ஐ தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால், கேட்டுதான் சொல்ல முடியும். மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையிலான பிரச்சனை குறித்த

விபரங்களையும் 1ம் எதிர்மனுதாரர் வேலை குறித்தும், 1ம் எதிர்மனுதாரரை விசாரணை செய்தால்தான் அவரால் சொல்ல முடியும் என்றால் சரிதான். எந்த விபரமும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.